



■பா.ராகவன்

# மாய வலை

தேதி சரியாகத் தெரியவில்லை. ஆனால், வருஷம் 1980. ஜனவரி மாதம். சவூதி அரேபியாவிலிருந்து புறப்பட்டு, ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வந்து சேர்ந்தார் ஒசாமா பின்லேடன்.

காபூலில் என்ன இருக்கிறது? உண்மையில் சொல்லப்போனால் ஒன்றுமில்லை. ஆப்கனில் சோவியத் படைகளுக்கு எதிராகப் புரட்சி செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த போராளிகளெல்லாம் பாகிஸ்தானில் பெஷாவரிலும் கராச்சியிலும் போய் உட்கார்ந்து, பல் குத்திக்கொண்டிருந்தார்கள். மிஞ்சிப்போனால் ஏழெட்டுத் தலைவர்கள். சுமார் ஐம்பது அல்லது அறுபது தொண்டர்கள். அவ்வளவுதான். இந்த பலத்தை வைத்துக்கொண்டு புரட்சியாவது புடலங்காயாவது?

வந்திருக்கும் சோவியத் ரஷ்யாவின் ராணுவத்தில் இருக்கிற தலைகளை எண்ணி மாளாது. நிற்கவைத்து பரேடு நடத்தினால் மைல் கணக்கில் நீளும் போலிருந்தது. தவிரவும் பீரங்கிகள் என்ன, இயந்திரத் துப்பாக்கிகள் என்ன, கண்ணிவெடிகள் என்ன, கைத்துப்பாக்கிகள் என்ன எல்லாவற்றைவிட முக்கியம், அவர்களிடமிருந்த வாக்கி டாக்கி. பீரங்கியைக் காட்டிலும் ஆப்கன் போராளிகள் அதைப் பார்த்துத்தான் பயந்தார்கள்.

யுத்தத்தில் வீரத்தைக் காட்டிலும் தகவல் தொடர்புதான் அதிமுக்கியமானது. உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடிந்த அணிதான் வெற்றி பெறும் என்று நேற்று வரையிலான யுத்த சரித்திரம் தெரிவிக்கிறது.

இதெல்லாம் ஆப்கன் போராளிகளுக்குத் தெரியும். ஆனால், அவர்களால் அப்போது பெருமூச்சு விட மட்டுமே முடிந்தது. காரணம், ஆள் பலம் போதாது. ஆயுத பலம் அறவே போதாது. அனுபவம்? ம்ஹூம். அப்படியொன்றும் பிரமாதமாகச் சொல்லிக்கொள்ள ஏதுமில்லை. குறி பார்த்துச் சோடா பாட்டில் வீசத் தெரிந்த அனுபவம்தான்.

ஆனால் அவர்களுக்கு வேட்கை இருந்தது. அன்னியர் பிடியிலிருந்து ஆப்கனிஸ்தான் விடுதலை பெறவேண்டும் என்று, ஆத்மசுத்தியுடன் விரும்பினார்கள். உயிரே போனாலும் பரவாயில்லை; போராடிப் பார்த்துவிடுவது என்று முடிவு செய்துதான் போராட்டம் வரை உயிர் தப்பியிருப்பதற்காகப் பாகிஸ்தானுக்கு வந்து ஒளிந்துகொண்டிருந்தார்கள்.

ஆப்கனிஸ்தானுக்கு அது ஒரு சாபக்கேடு. இப்போதைய ஹமீத் கர்ஸாய்க்கு முந்தைய நாள் வரை தனது சரித்திரம் முழுவதையும் யுத்தங்களிலேயே கழித்த தேசம் அது. வழியில் போகிற வீரப்பனெல்லாம் கொஞ்ச கொஞ்சகாலம் வந்து அரசுக் கட்டில் அல்லது தொட்டிலில் உட்கார்ந்து அனுபவித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். சந்தேகமில்லாமல் அது ஆற்றில் போகிற தண்ணீர். அய்யா குடி, அம்மா குடி என்று அள்ளி அள்ளிக் குடித்து அனுபவித்துத் தீர்த்திருக்கிறார்கள்.

ஒசாமா அங்கே முதல் முதலில் வலது அல்லது இடது கால் எடுத்து வைத்த காலத்தில் ஆப்கனிஸ்தான், சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் இருந்தது. இத்தனைக்கும் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஆப்கனிஸ்தானுடன் மிக நல்ல உறவுடன் நட்பு தேசமாக இருந்தது அது. என்ன பிரச்னையாகிவிட்டது என்றால், ஆப்கனில் உள்நாட்டுக் குழப்பம். வேறென்ன, அதிபரைக் கவிழ்த்துவிட்டு ராணுவத் தளபதி ஆட்சியைப் பிடித்தார். கவிழ்ந்த அதிபரின் பெயர் நூர் முகம்மது தராக்கி. கவிழ்த்த புண்ணியவான், அஃபிசுல்லா அமீன்.

தராக்கி இருந்த காலத்தில், அவர் ரஷ்யாவுக்குச் செல்லப்பிள்ளை. சமர்த்தாகச் சொன்ன பேச்சைக் கேட்டுக்கொண்டு தானுண்டு, தன் தேசமுண்டு என்று இருந்தார். ஆனால், ராணுவத் தளபதி அமீன் ஆட்சிக்கு வந்ததும் முதலில் செய்த புண்ணிய காரியம், சோவியத் யூனியனின் உறவை முறித்துக்கொண்டது. அதுவும் சகட்டுமேனிக்கு கம்யூனிஸ்டுகளைத் திட்டி தினசரி ஓர் அறிக்கை விட்டுக்கொண்டு இருந்தால், செம்படை வீரர்கள் சும்மாவா இருப்பார்கள்?

சரிதான் வா, நீயாச்சு நானாச்சு என்று சோவியத் யூனியன் படை அனுப்பிவிட்டது. ஒரே நாள். ஒரே ராத்திரி. அஃபிசுல்லா அமீனைச் சுற்றி வளைத்து சட்னியாக்கிவிட்டார்கள். அப்புறமென்ன? தாங்கள் சொன்ன பேச்சைக் கேட்கும் ஓர் அரசை அமைக்கும் வேலையில் இறங்குவது போன்ற பாவனையில் ஆப்கன் முழுவதிலும் சோவியத் கொடியைப் பறக்கவிட்டுவிட்டார்கள்.

இதைப் பார்த்துக்கொண்டு அமெரிக்கா சும்மா இருக்குமா? ஏற்கெனவே சோவியத் – அமெரிக்கப் பனிப்போர் உச்சத்தில் இருந்த நேரம் அது. ஆசியாவில் தனக்கொரு தளம் கிடைக்குமா என்று ஆலாய்ப் பறந்துகொண்டிருந்தது அமெரிக்கா. ஆப்கனிஸ்தான் என்பது அமெரிக்காவுக்கு லட்டு. அங்கே கூடாரம் அடித்து உட்கார்ந்தால் ஒட்டுமொத்த ஆசியாக் கண்டத்தையும் கவனிக்கலாம். பரம சௌகரியமாக எண்ணெய் வர்த்தகத்துக்கு வழிகள் அமைக்கலாம். இதையெல்லாம் உத்தேசித்து அமெரிக்காவும் களத்தில் இறங்கிவிட்டால் பிறகு அது ஆப்கன், சோவியத் யுத்தமாக இருக்காது. அமெரிக்க ரஷ்ய யுத்தமாகிவிடும். அப்போது ஆப்கன் மக்கள்? சந்தேகமில்லாமல், கொத்து பரோட்டாதான்.

இதையெல்லாம் யோசித்த ஆப்கன் இளைஞர்கள் சிலர் ஒன்று திரண்டதன் விளைவுதான், சோவியத்துக்கு எதிராகப் போரைத் தொடங்கலாமா என்று பாகிஸ்தான் போய் ரூம் போட்டு உட்கார்ந்து யோசித்த காண்டம்.

ஆகவே, காபூலுக்கு வந்த ஒசாமாவுக்கு அங்கே வேலையில்லை. அன்றே புறப்பட்டு அவர் பெஷாவர் போய்ச் சேர்ந்தார்.

இதெல்லாம் சாதாரண விஷயமே இல்லை. ஒசாமா ஆப்கனிஸ்தானுக்கு வந்ததே ஒரு ரகசிய விமானத்தில். அங்கிருந்து பெஷாவர் போய்ச் சேர்ந்தது இன்னொரு ரகசிய விமானத்தில். மொத்தமாக நாலரை மணி நேரத்தில் அவருக்கு இது சாத்தியமானது என்றால் அவரது அப்போதைய பணபலம் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

எல்லாம் அப்பன் சொத்து. சவூதி மன்னரே ஒசாமாவுக்கு விமானம் ஏற்பாடு செய்து கொடுத்ததாகக் கூட ஒரு வதந்தி உண்டு. பாகிஸ்தானில் அவர் சந்திக்கவிருந்த ஆப்கன் புரட்சியாளர்களுக்கும் முன்னதாக அவரது வருகையைத் தெரிவித்து சவூதி அரசாங்கமே ரகசியத் தகவல் அனுப்பியிருந்தது.

ஆக, சவூதியிலிருந்து ஆப்கன் வழியே பாகிஸ்தான். பெஷாவர் வந்து சேர்ந்தார் ஒசாமா.

பெஷாவரிலேயே பஞ்சத்தில் அடிபட்ட மக்கள் வாழும் மிக மோசமான பகுதி அது. சாலை கிடையாது. விளக்குகள் கிடையாது. அவசர ஆத்திரம் என்று இயற்கை அன்னை அழைத்தால்

கூட ஒதுங்க ஓரிடம் கிடையாது. அப்படியொரு இடத்தில் ஒரு சிறு மண் வீட்டைத் தேர்ந்தெடுத்து உள்ளே உட்கார்ந்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள் அவர்கள்.

புர்ஹானுத்தீன் ரப்பானி (Burhanuddin Rabbani) என்பவர் அந்தக் குழுவில் மிக முக்கியமான நபர். ஜமாத் ஏ இஸ்லாமி இயக்கத்தின் தலைவர். சையது அகமது கைலானி (Syed Ahmed Gailani) என்று இன்னொருவர். மிகப் பெரிய மார்க்க அறிஞர். மஹஜ் ஏ மிலி (விணீலீணீக்ஷ்மிவிவீற்றீவீ) என்ற இயக்கத்தின் தலைவர். நபி முஹம்மதி (Nabi Muhammadi) என்று இன்னொரு மாபெரும் மார்க்க அறிஞர். இவர்களைத் தவிர, ஹிஸ்ப் ஏ இஸ்லாமி அமைப்பின் தலைவர் குல்புதீன் ஹெக்மதியார், அதே அமைப்பைச் சேர்ந்த இன்னொரு தலைவரான யூனுஸ் காலிஸ், ஹர்கத் ஏ இன்குலாப் இஸ்லாமி என்னும் இயக்கத்தைச் சேர்ந்த நபி முகம்மதி, சிப்கத்துல்லா முஜாதிதி என்று பல பெருந்தலைகள் அங்கே கூடியிருந்தனர். சூப்பர் ஸ்டார் மாதிரி ஜமாத் ஏ இஸ்லாமியின் கமாண்டர் அஹமது ஷா மசூத் நடுநாயகமாக வீற்றிருந்தார்.

இவர்களில் புர்ஹானுத்தீன் ரப்பானியையும், அப்துர் ரப் ரசூல் சயஃப்பையும் மட்டும்தான் ஒசாமாவுக்குத் தெரியும். அதுகூட ஒரு சமயம் ஹஜ்ஜுக்குப் போனபோது வழியில் பார்த்து நாலு வார்த்தை பேசியது மட்டுமே. ஆனால் அதெல்லாம் ஒரு விஷயமா? சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாகிறார்கள். சிந்தை இரங்குவதைக் காட்டிலும் வேறென்ன பெரிய வேலை?

ரப்பானி அவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

“இந்த இளைஞர்தான் ஒசாமா. சவூதி மன்னர் ஃபைசல் இப்ன் அப்துல் அஜிஸின் (Faisal ibn Abdul Aziz) நெருங்கிய நண்பரான முகம்மது பின்லேடனின் மகன்.”

முகம்மது பின்லேடனின் பெயரைச் சொன்னதுமே கூடியிருந்தவர்களுக்கு அவரது பணம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. கொஞ்சநஞ்சப் பணக்காரரா! தவிரவும் சவூதி அரேபியாவில் மன்னருக்கு அடுத்தபடி செல்வாக்குப் பெற்ற குடும்பம். ஆகவே வரவேற்பதில் அவர்களுக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. பேச ஆரம்பித்தார்கள்.

சவூதி மன்னருக்கு ஆப்கன் போராளிகள் மீது அனுதாபம் உண்டு. ஆனால், நேரடியாக அவரால் உதவ முடியாது. அப்படிச் செய்தால், சோவியத் யூனியனின் பகையைச் சம்பாதித்துக்கொள்வது போலாகிவிடும். ஆகவே, தன்னிச்சையாக ஆப்கன் போராளிகளுக்கு உதவி செய்வதற்காகக் கிளம்பிய ஒசாமாவை அவர் தனது கருவியாகவும் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்திருந்தார்.

என்ன உதவி வேண்டுமானாலும் செய்யுங்கள். உங்களுக்கு உதவ நானும் இருக்கிறேன். ஆனால் ரகசியமாக.

இதுதான் மன்னர் சொல்லியனுப்பிய செய்தி.

சரி, என்ன வேண்டும்? என்ன செய்யலாம்? நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார் ஒசாமா.

அஹமது ஷா மசூத் கேட்டார் : “அதெல்லாம் இருக்கட்டும்; நாங்கள் கஷ்டப்படுவது குறித்து உங்களுக்கு என்ன அக்கறை?”

ஒசாமா புன்னகையுடன் பதில் சொன்னார்: “எந்த முஸ்லிமை யார் அடித்தாலும் எனக்கு வலிக்கும்.”

அல் காயிதாவின் இன்றுவரையிலான நோக்கம், செயல்திட்டம் அனைத்துமே இதுதான். இந்த ஒரு

வரியைக் கொண்டுதான் அல் காயிதாவைக் கட்டினார் ஒசாமா பின்லேடன். அல் காயிதா என்ற சொல்லுக்கே அடித்தளம் என்றுதான் பொருள். மிக வலுவான அடித்தளம் இது. கவனித்துப் பார்த்தால் நிறைய பொருள் தரும் வாசகம் இது. முஸ்லிமை அடித்தால் வலிக்கும். எந்த முஸ்லிமை அடித்தாலும் வலிக்கும். யார் அடித்தாலும் வலிக்கும். எனக்கு வலிக்கும்."

அங்கே கூடியிருந்தவர்கள் ஒசாமாவை நூறு சதவிகிதம் நம்புவதற்கு, அந்த ஒரு வரி போதுமானதாக இருந்தது. உடனே ஆரம்பித்துவிட்டார்கள். என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

ஆயுதங்கள் வேண்டும் என்பதுதான் அவர்களது மிக முக்கியமான கோரிக்கையாக இருந்தது. ரப்பானிக்கு அதுதான் தலைபோகிற கவலை. ஏனெனில், அவர்களுடனிருந்த சுமார் ஐம்பது வீரர்களுக்குப் போதுமான துப்பாக்கிகள் கூட இல்லை. ஷிப்ட் முறையில்தான் அவர்களுக்குத் துப்பாக்கியே கிடைக்கும். அதுவும் சாதாரண நாட்டுத் துப்பாக்கி. ஆப்கனில் பலசரக்குக் கடைகளில் கூட அப்போது அந்த ரகத் துப்பாக்கிகள் தாராளமாகக் கிடைக்கும். லைசென்ஸாவது மண்ணாங்கட்டியாவது? சின்னக் குழந்தைகளுக்குக் கூட அங்கே துப்பாக்கியுடன் சிநேகம் உண்டு. வீட்டில் இருக்கும் ஒட்டடைக் கொம்பு, துடைப்பம் போல, அதுவும் ஒரு வஸ்து. அவ்வளவுதான். துப்பாக்கிதான் அப்படி என்றால், ரவைகள்? அதுவும் சமையல் ரவை போலவே சுலபமாகக் கிடைக்கக் கூடிய ஒரு பொருள்தான். யுத்தம் சாதாரணமாகிவிட்ட தேசத்தில், துப்பாக்கிகளுக்குப் பெரிய மரியாதை இருப்பதில்லை போலிருக்கிறது.

ஆனால் ஒசாமாவுக்கு அப்போது துப்பாக்கி எப்படி இருக்கும் என்பதுகூடத் தெரியாது. ஒரு யுத்தம் எப்படி நிகழும் என்று தெரியாது. போர்த் தந்திரங்கள், ஒற்றறிதல், அணிவகுத்தல், வியூகம் அமைத்தல், ஆயுதச் சேகரிப்பு, பாதுகாத்து வைத்தல் எது குறித்தும் அரிச்சுவடி கூடத் தெரியாது.

அவரிடம் பணம் இருந்தது. கற்பனை செய்யமுடியாத அளவுக்குப் பணம். அள்ள அள்ளப் பணம். கட்டுமானத் தொழிலில் கொடிகட்டிப் பறந்தவரான அவரது தந்தை, தமது நான்கு மனைவியர் மூலம் பெற்றெடுத்த ஐம்பத்தியேழு குழந்தைகளுக்கும் விட்டுச் சென்ற சொத்தில் ஒசாமாவின் பங்குமட்டுமே நூறு கோடிகள் இருந்தன. அவர் மிகுந்த புத்திசாலித்தனமுடன் தமக்குக் கிடைத்த பணத்தைத் தமது குடும்ப நிறுவனமான சவூதி பின்லேடன் க்ரூப்பிலும் இதர பல நிறுவனங்களிலும் முதலீடு செய்து, மேலும் மேலும் பெருக்கிக்கொண்டிருந்தார்.

ஆகவே தயங்காமல் சொன்னார் : "ஆயுதம் வாங்கலாம். அது ஒரு பிரச்னை இல்லை. எத்தனை செலவானாலும் நான் பார்த்துக்கொள்கிறேன். ஆனால், ஐம்பது பேரை வைத்துக்கொண்டா சோவியத் யூனியனை எதிர்க்கப் போகிறீர்கள்? இது எனக்கு அபத்தமாகப் படுகிறது."

அபத்தம்தான். ஆனால் என்ன செய்யமுடியும்? கிடைத்தவர்கள் அவ்வளவு பேர்தானே?

ஒசாமா யோசித்தார். இறுதியில் சொன்னார்: "சரி. நாம் ஆயுதம் வாங்குவோம். ஆள்களையும் திரட்டுவோம். நான் பொறுப்பு."

அன்றுதான் அது ஆரம்பித்தது.